1990 சனவரி 25]

மாண்புமிகு டாக்டர் எ. இராமகிருஷ்ணன் : மாண்புமிகு தலைவர் அவர்களே,

திருநெல்வேலி-கட்டபொம்மன் மாவட்டம், கடையம் ஊராட்சி ஒன்றியம் மந்தியூர் கிராமத்தில் ஆதிதிராவிடர் நலத் துறை மூலம் தொடக்கப்பள்ளி துவங்குவதற்கான செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பழங்குடி மக்களாக அறிவித்தல்.

*3546—திரு. ந. நஞ்சப்பன் :

மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர், கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

தருமபுரி மாவட்டத்தில் குரும்ப, குருப, குரும்மஸ், குரும்பன்கள், குரும்பர்கள் என்று பலவிதமாக அழைக்கப்படும் மக்களை பழங்குடி மக்களாக அரசு அறிவிப்பு செய்யுமா ?

மாண்புமிகு டாக்டர் எ. இராமகிருஷ்ணன் : மாண்புமிகு தலைவர் அவர்களே,

தமிழகத்தில் உள்ள குருமா, குரும்பர், குரும்பன்கள், குரும்பார்கள், இனத்தவர்களை பழங்குடியினர் பட்டியலில் சேர்ப்பது மத்திய அரசின் ஆய்வில் உள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ந. நஞ்சப்பன் : பேரவைத் தலைவர் அவர்களே, தர்மபுரியில் உள்ள குரும்பன், குரும்பாஸ் என்ற மக்கள் ஒரே வகையைச் சேர்ந்தவர்கள், வட ஆற்காடு, பெரியார் போன்ற மாவட்டங்களில் பழங்குடிகளாக அங்கீகரிக்கப்பட்ட மக்கள், தர்மபுரி மாவட்டத்தில் மட்டும் இன்னும் அங்கீகரிக்கப்பட வில்லை. அதில் குரும்பர்கள, குரும்பாஸ் என்ற எழுத்தை தமி ழில் எழுதினால் பிற்பட்டவர்களாகவும் ஆங்கிலத்தில் குறித்தால் பழங்குடி மக்களாகவும் அங்கீகரிக்கப்படுகின்ற நிலையை மாற்றி, இரண்டு விதமாக எழுதினாலும் பழங்குடி மக்களாக அறிவிக்கப் படுகின்ற நிலையை அரசு கொண்டு வருமா என்று அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு டாக்டர் எ. இராமகிருஷ்ணன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, அது பற்றி அரசு பரிசீலனை செய்யும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.